இலவச பிரதி
Registered as a NewsPaper
விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-20 | 05-09-2005 | திங்கட்கிழமை | ஓசை-200


கணேசா நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464.
இல:104. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12760)

## போராளிக் கலைஞர் புகழினியின் பரதநிருத்திய நிகழ்வில் தேசியத் தலைவர்







நிதர்சனப் பிரிவுப் போராளியும் தமிழீழ நுண்கலைக் கல்லூரி மாணவியுமான செல்வி புகழினியின் பரதநிருத்திய அரங்கேற்ற நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். போராளி இசைப்பிரியாவின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வரவேற்புரையினை நிதர்சனம் மகளிர் பொறுப்பாளர் செல்வி பிரமிளா நிகழ்த்த, ஆசியுரையினை கவிஞர் புதுவை இரத்தினதுரை வழங்கினார். தமிழீழ நுண்கலைக் கல்லூரி பொறுப்பாளர் தணிகைமாறன், அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ அரசை அங்கீகரிக்கக் கோரி

# பொங்குதமிழ் 2005 எழுச்சி நிகழ்வு!

## இம்மாதம் 30 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**தமிழர் தாயகப் பிரதேசம் எங்கிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையிலான தமிழீழ அரசின் செயற்பாடுகள் நடைமுறையிலுள்ளன. இத் தமிழீழ அரசை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு-2005 இம்மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளது.**

நடைமுறையிலுள்ள இந்தத் தமிழீழ அரசை அங்கீகரிப்பதன் மூலம் வன்முறைகளின்றி சிங்கள இனத்திற்கும்தமிழ் தேசிய இனத்திற்கும் இடையே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உரிய அடித்தளத்தை ஏற்படுத்த வேண்டும் என்று இந்தப் பொங்குதமிழ் எழுச்சி மூலம் சர்வ தேச சமூகத்திடம் வற்புறுத்தல் விடுக்கப்படவுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக் கழக சமூகத்தினரது ஒழுங்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்.இல் இருதாக்குதல்கள் இருபடையினர் படுகாயம்

மட்டக்களப்பு வாழைச்சேனைவீதியில் நேற்றுமாலை 5.00 மணிக்கும்5.30 மணிக்குமிடையில் சிறிலங்கா இராணுவ வாகனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் போதுஇரண்டு இராணுவச் சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளனர். மொழிப்பயிற்சி வகுப்பொன்றில் கலந்து கொண்டு முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமிற்கு திரும்பிக் கொண்டிருந்த சிப்பாய்கள் பயணம் செய்த பேருந்து வண்டி மீது இனந்தெரியாத நபர்கள் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு இராணுவச்சிப்பாய் காயமடைந்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

### பதவிப் போட்டியில் தோல்வி

## சிறீல. கடற்படை தலைமை அதிகாரி விரைவில் ஓய்வுபெறுகிறார்

(கொழும்பு)

பதவிப் போட்டியில் ஏற்பட்ட தோல்வி காரணமாக சிறிலங்கா கடற்படையின் தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம விரைவில் ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளார்.

கடற்படைத் தளபதியாக இதுவரை காலம் பதவியிலிருந்த தயாசந்தகிரி ஓய்வுபெற்ற பின்னர் இரண்டாம் நிலையிருலிருந்த இவர் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்படாமல் மூன்றாவது (12 ஆம் பக்கம் பார்க்க)


### -லெப். கேணல் மறவன் நினைவாக உருவாக்கப்பட்ட-

## தமிழீழ கடற்படையின் துணைப்படையின் 2ஆவது அணியினருக்கான பயிற்சி நிறைவு

லெப்.கேணல் மறவன்மாஸ்ரர் நினைவாக உருவாக்கப்பட்ட தமிழீழக் கடற்படையின்துணைப் படையின் இரண்டாவது அணியினருக்கான பயிற்சி நிறைவு விழாவெகு சிறப்பாகநடைபெற்றுள்ளது.

நேற்றுப்பிற்பகல் ஐந்து மணிக்கு வடமராட்சிகிழக்கு உடுத்துறை மகா வித்தியாலய மைதானத்தில் லெப் கேணல் மறவன் மாஸ்ரர் பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்ற தமிழீழக் கடற்படையின் இரண்டாவது துணைப்படை அணியினருக்கான பயிற்சி நிறைவு விழா நிகழ்வு (12 ஆம் பக்கம் பார்க்க)

## களுவாஞ்சிக்குடி அரசியல்துறை பணிமனை மீது கைக்குண்டு வீச்சு; துப்பாக்கிச் சூடு!



### போராளி ஒருவர் வீரச்சாவு; பணிமனைக்குத் தீவைப்பு

விடுதலைப்புலிகளின் களுவாஞ்சிக்குடி அரசியல்துறை பணிமணை மீதுசிறிலங்காப் படையினரின் உதவியுடன் தேசவிரோதிகளால் கைக் குண்டுத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 6.50 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலில் அருள்நேசன் என்ற போராளி வீரச்சாவடைந்துள்ளார். மட்டக்களப்பு-கல்முனைவீதியில் களுவாஞ்சிக்குடி நகருக்கு அருகில் அமைந்துள்ள பணிமனையில் தாக்குதல் சம்பவத்தின் போது பட்டிருப்புக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கமலக்கண்ணன் மற்றும் களுவாஞ்சிக்குடி அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வம்மாமா உட்பட நான்கு விடுதலைப்புலி உறுப்பினர்கள் அங்கு இருந்துள்ளனர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றூர்தி குடை சாய்ந்தது மூவர் காயம்

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறைக்குச் சென்ற சிற்றூர்தி கடலில் குடை சாய்ந்ததனால் அதில் பயணம் செய்த மூவர் காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் அல்லைப்பிட்டிக்கும் மண்டை. (12 ஆம் பக்கம் பார்க்க)

# புதுக்கடை திறப்பு விழா

**புதுக்குடியிருப்புச் சந்தியில் இயங்கி வந்த**

## மதி உணவகம்

*05.09.2005 இன்று சுபவேளையில் இளவேனிலுக்கு அருகாமையில் இடமாற்றம் செய்யப்படவுள்ளது என்பதனை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.*

தகவல்:-
உரிமையாளர்,
பணியாளர்கள்.

(சி.12672)

# கேள்வி அறிவித்தல்

## கிளிநொச்சியில் அரசஅதிபருக்கான சுற்றுலா விடுதி அமைப்பதற்கான கேள்வி கோரல்

மேற்குறித்த வேலைகளுக்கான கேள்வி விண்ணப்பங்கள் கிளி. மாவட்ட செயலக கேள்விச்சபையால் கோரப்படுகின்றது. இக் கேள்விக்கு பெறுமதி சேர்வரியில் தங்கள் பெயரைப் பதிவு செய்து **(VAT)** இலக்கத்தினைப் பெற்றுக் கொண்டதும் இலங்கை தேசிய நிர்மாணிகள் ஒப்பந்தக்காரர் சங்கத்தில் **(ICTAD)**,M5 நிலைக்கு மேற்பட்ட உறுப்பினருமாகிய தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் / நிறுவனங்களும்/ சங்கங்களும் மட்டுமே கேள்வி கோர முடியும்.

இது சம்பந்தமான விபரங்கள் அலுவலக நேரத்தில் செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விப் பத்திரங்கள் 16.09.2005 நண்பகல் 12 மணிவரை கிளி/மாவட்ட செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுநாள் 19.09.2005 காலை 10.00 மணிவரை.

*தி. இராசநாயகம்,*
*அரசாங்கஅதிபரும்,*
*கிளி/மாவட்ட கேள்விச்சபைத்தலைவரும்,*
*கிளிநொச்சி மாவட்டம்.*

(சி.12665)

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### நடத்துநர் பணிக்கானவிண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்:-**

01. கல்வித்தகைமை:— ஆண்டு-10.
02. அகவை:— 21தொடக்கம் 35 வரை.
03. உயரம்:— 05அடி 05அங்குலம்.

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள்:- 15.09.2005
02. சம்பளம் :-
$\frac{4,430-5,530}{10:x110}$ +2,700.00=7,130.00+சிறப்புக்கொடுப்பனவு 2,300.00=9,430.00
03. விண்ணப்பதாரருக்கான நேர்முகத்தேர்வு:- 19.09.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.
04. நேர்முகத்தேர்வுக்கு வருகைதருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05. விண்ணப்ப படிவங்களை முல்லைத்தீவு,புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: -**
**முகாமையாளர்,**
**ஆளணி ஆளுகைப் பகுதி,**
**தமிழீழப் போக்குவரவுக் கழகம்,**
**நடுவப்பணிமனை,**
**விசுவமடு.**

(சி.12670)

## வன்முறைகளை ஒழிக்க பிரதமர் முன்வர வேண்டும்

### சஜீத் பிரேமதாச கோரிக்கை

அம்பாந்தோட்டையில் தற்போது அரசியல் வன்முறைகள் இடம் பெற்று வருவதனால் அங்கு வாழும் ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முன்வர வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சஜீத் பிரேமதாச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்தில் ஊடகவியலாளர்களிடம் சஜீத் பிரேமதாச கூறியதாவது:

அம்பாந்தோட்டை ஐக்கிய தேசியக் கட்சி நகரசபை உறுப்பினரான ஜி.பி.நியூட்டனின் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் ஐக்கிய தேசியக்கட்சியினர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கும் வகையில் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2001 இலும் அம்பாந்தோட்டையில் அரசியல் வன்முறைகள் இடம் பெற்றன. இன்று நடைபெறும் வன்முறைகளுக்கு தற்போதைய அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

சிறிலங்காவை ஒரு உயர் நிலைக்கு கொண்டுவருவதாயின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று பிரதமரைக் கேட்டுக் கொள்கிறோம் என சஜீத் பிரேமதாச கேட்டுள்ளார்.

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

கொழும்பு வாழைத்தோட்டம் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். ஆரோக்கியராஜா (வயது-38) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் ஒரு பிள்ளையின் தந்தை ஆவார். கொலையாளிகள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டு முச்சக்கர வண்டியில் தப்பித்துச் சென்றுள்ளனர் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## பணிநிலை வெற்றிடம்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஆய்வு கூடதொழில் நுட்பவியலாளர்களாக பணிபுரிவதற்கு பயிலுனர்கள் தேவை.

தகைமை:- க.பொ.த உயர்தரத்தில் உயிரியலினை பாடமாகக் கற்றவர்களும்,
ஆய்வு கூடப்பணியில் ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி விண்ணப்பதாரிகள் சுயவிபரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளலாம்.

தலைவர்,
கிளிநொச்சி மருத்துவசங்கம்,
மாவட்டவைத்தியசாலை,
கிளிநொச்சி.

(சி.12629)

## நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்
## CENTRE FOR HEALTH CARE

**நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட உப மருந்தாளர் பயிற்சி நெறியில் சித்தி எய்திய மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள்**

**விசேடசித்தி (Distinction)**

| பெயர் | சுட்டெண் |
|---|---|
| வ.ஜெனகன் | SP/001/05 |
| த.கனகசிங்கம் | SP/003/05 |
| ந.கேதீஸ்வரி | SP/004/05 |
| பு.மனோகரன் | SP/007/05 |
| சி.பிரேலேந்திரன் | SP/009/05 |
| நா.ரெங்கநாயகி | SP/010/05 |
| ந.ராதிகா | SP/011/05 |
| ந.விஜயலதா | SP/021/05 |

**திறமைச்சித்தி (Credit)**

| பெயர் | சுட்டெண் |
|---|---|
| அ.நளாயினி | SP/008/05 |
| லோ.விஜயராஜி | SP/022/05 |
| ந.விமலினி | SP/024/05 |

**சாதாரணசித்தி (Ordinary Pass)**

| பெயர் | சுட்டெண் |
|---|---|
| சி.சசிக்குமார் | SP/012/05 |
| சி.சிறிவிஜயா | SP/015/05 |
| ந.சற்குணராஜா | SP/016/05 |
| இ.சரிதா | SP/017/05 |
| ந.நனேஸ்வரன் | SP/019/05 |
| இ.வாசகீதன் | SP/020/05 |
| S.வசந்தி | SP/023/05 |
| [illegible] | SP/025/05 |

*"நலமான சமூகத்தை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்து உழைப்போம்"*
*"Working together for a healthier community"*

தலைமைப்பணிமனை:- கிளிநொச்சி, இலங்கை.
தொலைபேசி/தொலைநகல்:- 021 228 5884,
மின் அஞ்சல்:- info@centre forhealthcare. org
Head office:- CHC, Kilinochchi,Sri Lanka.
Telephone/Facsimile:021228 5884 E-mail:Info@centreforhealthcare. org

(சி.12673)

## வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்)

# சமூக அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இயங்கிவரும் நிகொட் கருத்திட்ட மாவட்ட முகாமைத்துவப்பிரிவில் சமூக அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் அரசாங்க அதிபர், கச்சேரி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 19.09.2005 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் நவுறாது "நிகொட்" மாவட்ட முகாமைத்துவப்பிரிவு அலுவலகத்தில் சமூக அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" என பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

**தகைமைகளும் அனுபவங்களும்:-**

சமூகவியல், பொருளாதாரம்,வணிக நிர்வாகம், முகாமைத்துவம் ஆகிய துறைகளிலொன்றில் அல்லது வேறு சம்பந்தப்பட்ட துறைகளில் பட்டதாரியாக இருப்பதுடன் கிராமப் புறங்களில் சமூக அபிவிருத்திப் பணிகளில் 04 வருட அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

க.பொ.த (உயர்தரம்) சித்தியுடன் கிராமப்புறங்களில் சமூக அபிவிருத்திப் பணிகளில் 06 வருட அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

**தொழிற்தகைமைகள்:-**

ஆங்கிலத்தில் உரையாடவும், எழுதவும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
கணனியில் MS office இல் சிறந்த அறிவுடன் Internet E-mail ஆகியனவற்றில் அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
சிறந்த தொடர்பாடல் திறமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.12681)

# அமெரிக்காவை உலுக்கிய "கற்றினா" சூறாவளி

## நிவாரண உதவிவழங்க முடியாது அரசு திண்டாட்டம்

**(நியூயோர்க்)**

**உலகின் எப்பகுதியில் பேரழிவு ஏற்பட்டாலும் நிவாரணப் பொருட்களுடனும்,மீட்புப்படையுடனும் உடனேயே பிரசன்னமாகும் அமெரிக்கா, அதன் ஒரு பகுதியில் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்க முடியாதநிலையில் தவித்துக் கொண்டிருக்கிறது.**

"கற்றிரினா" என்று பெயர் சூட்டப்பட்ட சூறாவளி லூசியானா மாநிலம் முழுவதையும் கடந்த திங்கட்கிழமை தாக்கியிருந்தது. குறிப்பாக நியூஓர்லியன்ஸ் மற்றும் அதன் சுற்றுப் பிரதேசங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளானதுடன் தொடர்ந்தும் தேங்கியிருக்கும் வெள்ளம் மக்களின் போக்குவரத்திற்கான வசதிகளை முற்றாகத் துண்டித்துள்ளது.இந் நிலையில் அப்பகுதிகளில் சூறாவளி தாக்கி நான்கு நாட்கள் கடந்தபிற்பாடே நிவாரணப் பொருட்கள் சிறிது சிறிதாகச் செல்லத் தொடங்கியுள்ளன.



நியூஓர்லியன்ஸ் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் அமைந்திருந்த நிலப்பகுதி கடல் மட்டத்திற்கு கீழானதாக இருந்த காரணத்தால் கடல் பெருக்கெடுத்தால் வெள்ளம் ஏற்படும் அபாயமும் அறியப்பட்ட ஒன்றாகவே இருந்துவந்தது.எனினும்மானிட எதிர்பார்ப்பிற்கு மாறானவகையில் நீர்மட்டம் உயர்ந்த தோடு, அணைகளில் ஏற்பட்ட உடைப்பு உட்பட பல இன்னோரன்ன காரணங்களால் அப்பிரதேசம் வெள்ளக்காடாகவே மாறி யிருந்தது.

மேற்படி சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்தங்களில் இறந்தவர்களின் தொகை ஆயிரக் கணக்காக இருக்கலாம் என்று கருதப்படும் அதேவேளை எந்தவித நிவாரணப் பணிகளும் உரிய நேரத்தில் முன்னெடுக்கப்படாததால் சடலங்கள் மீட்கப்படாமலும் நீரிலேயே மிதந்த வண்ணமுள்ளன. பல ஆயிரக்கணக்கானோர் மீட்பர்களை எதிர்பார்த்து உயரமான கட்டடங்களிலும் கூரைகளிலும் தங்கியுள்ளனர்.

சம்பவம் நடந்த மறுநாள்அமெரிக்க சனாதிபதி மேற்படி இயற்கை அழிவுப் பிரதேசத்தை விமானத்தில் சுற்றிப் பார்த்ததோடு ஒரு பத்திரிகையாளர் மாநாட்டையும் கூட்டியிருந்தார். அதில்மேற்படிபகுதிகளுக்கான நிவாரணப் பொருட்கள்உடனேயே அனுப்பி வைக்கப்படும் என்றும், மேற்படி பிரதேசம் வெகு விரைவில் வழமைக்குத் திரும்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்திருந்தார்.

எனினும் உதவிகள் எவையும் முற்றாகவே சென்றடையாத தானதுமக்கள் மத்தியில் மிகுந்தபதற்றத்தையும், சிக்கல்களையும், சட்டஒழுங்குச் சீர்கேட்டையும் ஏற்படுத்தியிருந்தது. முற்றாகச் குடிநீரின்மை மற்றும் உணவுப் பொருட்களின்மை என்பவற் றோடு சுகாதாரச் சீர்கேடு போன்றவையே இதற் கான முக்கிய காரணமாகும்.

இவ்வாறு உதவிப் பொருட்களின் தாமதமானது மக்களை அமெரிக்க அரசாங்கத்திற்கு எதிராக திருப்பி விட்டுள்ளதோடு, நிறவாதம் தொடர்பானபலத்த சர்ச்சைகளையும் எழுப்பியுள்ளது. குறிப்பாக ஜோர்ஜ் புஷ் மீதான கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை மக்கள் ஊடகங்களினூடாக நேற்றுமுன்தினம் வெளிப் படுத்தியதுடன் அரசின் பாகுபாடே உதவிகள் கிடைக்காமைக்கான காரணம் என்பதைத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தனர்.

ஊடகவியலாளர்களையே தங்களின் குரலாக நம்பும் பாதிக்கப்பட்டமக்கள் அவர்களைச் சூழ்ந்து தங்கள் கவலைகளையும் வெறுப்புக்களையும் பகிர்ந்து கொண்டதை பல இடங்களிலும் காணக்கூடியதாக இருந்தது. அத்தோடு அமெரிக்காவின் பிரபல்ய நாளேடான "நியூயோர்க்ரைம்ஸ்"கூட புஷ்ஷின் அசமந்தப்போக்கினைக் கடுமையாகச் சாடியுள்ளது.

குறிப்பாக லூசியானா மாகாண ஆளுநர் மற்றும் அமெரிக்க சனாதிபதி ஆகியோர் இப்பேரழிவில் எதிர்பார்த்தளவு வேகமாகச் செயற்படவில்லைஎன்ற வியப் பிற்குரிய உண்மையைசகலஊடகங்களும் வெளியுலகின் பார்வைக்குக் கொண்டு வந்துள்ளன.

அலபாமா,மிசிசிப்பி மற்றும் லூசியானாப் பகுதிகளிலுள்ள பல நகரங்களிலும் கறுப்பினத்தவர்களே பெரும்பான்மையாக இருப்பதாலும் இந்தப் பகுதிகளில் கடந்த காலங்களில் நிறவாதத்திற்கு உட்பட்டவை என்ற காரணத்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் பலரும் தாங்கள் கறுப்பினத்தவர்கள் என்ற காரணத்தினாலேயே தங்களிற்கு நிவாரணம் இன்னமும் வந்தடைய வில்லை என நம்புவதாக ஊடகங்களிற்குத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க காங்கிரசின் உறுப்பினர்களான கறுப்பினத்தவர்களும் நிவாரணப்பணிகள் உரிய வேகத்தில் நடைபெறவில்லை என்ற குற்றச் சாட்டை முன்வைத்துள்ளனர். அதிலும் நியூ ஓர்லியன்ஸ் நகரமுதல்வர் அமெரிக்க சனாதிபதி தொடர்பாகத் தெரிவித்துள்ள மிகக்கடுமையான கருத்துக்கள் அந்நகர மக்களின் ஆதங்கங்களைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்துள்ளன.

மக்கள் அகதிகளாகத்தங்கியுள்ள இடங்களிலும் மனிதக் கழிவுகள் தேங்கிஅவையும் துர்நாற்றமாக உள்ளதாகவும் ஊடகங்கள் தெரிவித்துள்ள அதேவேளை மேற்படி பிரதேசத்தின் நிர்வாக ஒழுங்குகளைப் பேணவும், நிவாரணங்களை மேற்கொள்ளவும் சுமார் 40.000 தேசிய பாதுகாப்புப் படையினரை அனுப்பும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.



நியூ ஓர்லியன்சில் கற்றினா சூறாவளியால் வீடிழந்த பலர் லூசியானா சூப்பர்டோம் கட்டடத்தில் தஞ்சமடைந்தனர். அவர்களை அங்கிருந்து வேறொரு பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லும் பணி தொடர்ந்து நடக்கிறது.

## தீவிரவாதிகள் கண்ணிவெடித் தாக்குதல் 23 பொலிசார் உடல்சிதறிப் பலி;

சத்திஸ்கார் மாநிலம் விஜப்பூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை நக்சலைட் தீவிரவாதிகள் பொலிசாரின் வாகனமொன்றை கண்ணிவெடி மூலம் தகர்த்ததில் அதில் பயணம் செய்த மத்திய ரிசேவ் பொலிஸ்படையைச் சேர்ந்த 23 பேர் பலியாகினர்.

விஜப்பூர் மாவட்டம் பதே என்ற கிராமம் அருகே பொலிசாரின் வாகனம் சென்ற போது நக்சலைட்டுக்கள் இத் தாக்குதலை நடத்தியதாக முதமைச்சர் ராமன்சிங் தெரிவித்துள்ளார்.

குண்டுதுளைக்க முடியாத அந்த வாகனம் இத்தாக்குதலில் சின்னா பின்னமாகி விட்டதாகவும் சிதைந்த வாகனத்திலிருந்து பொலிசார் 16 பேரினது உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாகவும் படுகாயமடைந்தவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இதனையடுத்து அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# சீனாவைத் தாக்கிய "தாலிம்" சூறாவளிக்கு 56 பேர் பலி; பல கோடிரூபா சொத்தழிவு

(பீஜிங்)

கிழக்கு சீனாவில் வீசிய 'தாலிம்' என்ற சூறாவளி காரணமாக 56 பேர் இறந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து பெய்த கடும்மழை காரணமாக பெருவெள்ளமும் மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இச் சூறாவளி கடந்த வியாழக்கிழமை தாய்வான் தீவுகளை தாக்கியதனால் 48 பேர் கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து 'தாலிம்' சூறாவளி கிழக்கு சீனாவின் கரையோரப்பகுதியைத் தாக்கியது. இந்த சூறாவளி காரணமாக 110 கோடி யுவான் அதாவது 87 கோடி 70 இலட்சம் அமெரிக்க டொலர் சீனாவுக்கு பொருளாதார நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக செய்திஸ்தாபனம் ஒன்று தெரிவித்துள்ளது.

சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அதிகாரிகள் அப்புறப்படுத்தியுள்ளார்கள். கடந்தவெள்ளிக் கிழமை சூறாவளியின் தாக்கம் குறைந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

சீனபொதுமக்கள் விவகார அமைச்சு அல்லது வானிலை அவதான நிலையம் சூறாவளி பற்றி உடனடியாக எதுவும் தெரிவிக்க வில்லை. இதேவேளை தாலிம் சூறாவளி தாக்கியதில் மூன்று பேர் கொல்லப்பட்டும், 59 பேர் காயமடைந்துமுள்ளனர் ஆயிரக்கணக்கானோர். தமது இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர்.

சூறாவளிகள் தாய்வான், ஜப்பான், பிலிப்பைன்ஸ் ,ஹொங்கொங், தென் சீனா போன்ற நாடுகளில் காலத்துக்கு காலம் தாக்கத்தை ஏற்படுத்துமென அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



அரியானா மாநிலம் கோகனா பகுதியில் வகுப்புக் கலவரம் நடந்தது. அதை யொட்டி நடந்த கடையடைப்புப் போராட்டத்தின் போதுசான்டிகார் நகரில் பேருந்து தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

## தீவிரவாதிகள்- இராணுவம் துப்பாக்கிச் சமர் ஈராக்கில் 11 ஆயுதப் படையினர் உயிரிழப்பு

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் புறநகர்ப் பகுதி ஒன்றில் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் ஏற்பட்ட கடுமையான துப்பாக்கிச் சண்டையில் ஆறு ஈராக்கியப் பொலிசாரும் இரண்டு இராணுவத்தினரும் பலியாகியுள்ளனர்.

இதனிடையே அக்கைம் எனுமிடத்தில் இராணுவ வாகனம் மீது தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் மூன்று ஈராக்கிய இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். இந்தத் தொடர் தாக்குதலையடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

## அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு மொறட்டோனிய இராணுவ ஆட்சியாளர் வழங்கினர்

மொறட்டோனியாவில் புதிய இராணுவ ஆட்சியாளர்கள் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பை வழங்கியுள்ளார்கள். இந்த நடவடிக்கை காரணமாக அல்ஹைதா இயக்கத்துடன் தொடர்புடையதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட 50 இற்கும் அதிகமான தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

மொறேட்டோனியாவில் சனாதிபதியை கடந்தமாதம் பதவியிலிருந்து கவிழ்த்த இராணுவ அதிகாரிகள் மக்களின் ஆதரவைப் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

# பயங்கரவாதக் குற்றச்சாட்டின் பெயரில் பெருநாட்டில் நால்வருக்கு சிறைத்தண்டனை

பெருநாட்டில் பயங்கரவாத குற்றச் செயல்களை விசாரித்த நீதிமன்றம் கிளர்ச்சிக் குழுவொன்றை சேர்ந்த நான்கு நபர்களுக்கு 30வருடகாலசிறைத்தண்டனையை வழங்கியுள்ளது. 2002 ஆம் ஆண்டு லீமா நகரில் அமெரிக்கத் தூதரகத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் பத்துப் பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக நான்கு கிளர்ச்சியாளர்களுக்கு இத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது. சனாதிபதி ஜோர்ஜ்புஷ் பெருநாட்டிற்கு விஜயம் செய்ய சிலதினங்கள் இருக்கையில் இக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தொடர்மாடியில் தீ விபத்து பிரான்சில் பத்துப் பேர் பலி;

பிரான்சின் தெற்கு நகரத்தில் தொடர்மாடி ஒன்றின் 15 ஆவது மாடியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தீ விபத்தில் பத்துப் பேர் கொல்லப்பட்டும் 14 பேர் காயமடைந்துமுள்ளனர்.

இந் நகரத்தில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட விபத்துக்களில் இறந்தவர்களது எண்ணிக்கை இதனுடன் சேர்த்துப் பார்க்கும் போதும் மொத்தம் 30 ஆக உயர்ந்துள்ளது. இத்தீயினை அணைப்பதற்கு சுமார்160தீயணைப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். பாதிக்கப்பட்ட அனேகமானவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளார்கள் எனவும் மிகவிரைவில் தீ அணைக்கப்பட்டாலும் தீ ஏற்பட்டதற்கான காரணம் எதுவென அறியப்படவில்லை.

## நாட்டின் அனைத்து நலனுக்கும் பாடுபடுவேன் புருண்டியின் புதிய சனாதிபதி தெரிவிப்பு

புருண்டியின் புதிய சனாதிபதியாக பியரே லுசிசா பதவியேற்றுள்ளார். மத்திய ஆபிரிக்காவிலுள்ள புருண்டியில் கடந்த பத்து வருடங்களாக நடந்துவரும் உள்நாட்டுக் கலவரத்தை முடிவிற்குக் கொண்டுவரும் முகமாக புதிய சனாதிபதி ஒருவர் பதவியேற்றுள்ளார். முன்னாள் கிளர்ச்சிக்குழு ஒன்றின் தலைவரான பியரேலுசிசா அவர்களே புதிய சனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்

தான் நாட்டின் அனைத்து நலனுக்காகவும் பாடுபடப் போவதாக அவர் கூறியுள்ளார்.சிறுபான்மை ருட்சியின மக்களின் இராணுவம் குட்டுஇன கிளர்ச்சியாளர்களுடன் நடத்தியபோரில் மூன்று இலட்சம் மக்கள் புருண்டியில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பூநகரி செக்காலை, அரசபுரம் கிராம மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசெய்க!

(அலுவலக செய்தியாளர்)

**பூநகரி செக்காலை மற்றும் அரசபுரம் கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளமையின் காரணமாக அப்பகுதியில் வதியும் மக்கள் பெரும் துன்ப துயரங்களுக்குள்ளாகி வருவதாகத் தெரியவந்துள்ளது.**

இது குறித்து மேலும் தெரியவருகையில்; சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக பூநகரிப்பிரதேசத்திலிருந்து புலம் பெயர்ந்த மக்களில் 480 குடும்பத்தினர் 92 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சமூக மேம்பாட்டு நிறுவனத்திட்டத்தின் மூலம் செக்காலை, அரசபுரம் கிராமங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

அக்காலந்தொட்டு 2001 ஆம் ஆண்டு காலப்பகுதிவரை மேற்படி குடும்பங்கள் இக்கிராமங்களிலேயே வசித்து வந்தனர்.



(படம்:- சோதி)

2001 ஆம் ஆண்டு திரும்பவும் மக்கள் பூநகரி பிரதேச சொந்தக் கிராமங்களுக்கு மீளக்குடியமரத் தொடங்கியதைத் தொடர்ந்து தற்போது 40 குடும்பங்கள் மேற்படி செக்காலை மற்றும் அரசபுரம் கிராமங்களில் வசித்து வருகின்றனர்.

மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்ததை தொடர்ந்து பாடசாலைகளும் அந்தந்தப் பகுதிகளுக்கு மாற்றப்பட்டமையின் காரணமாக இவ்விரு கிராமங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் நான்கு கிலோமீற்றர் தூரம் சீரற்றகாட்டுப்பாதையூடாக பிரதான வீதியினை சென்றடைந்து பேருந்துகள் மூலம் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி கிராமங்களின் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் தினம்தினம் எதிர்கொள்ளும் போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கவனத்திற் கொண்டு அதனை சீர் செய்வதற்கான நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முனைப்புடன் செயற்படுத்தித்தர முன்வரவேண்டுமென செக்காலை, அரசபுரம் மக்கள் வேண்டிநிற்கின்றனர். (சோ)

## வருடாந்த மஹோற்சவம்

புதுக்குடியிருப்பு சிறி உலகளந்த பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் எட்டாம் திகதி நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 17ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

## நியாப்–II திட்டத்தின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகள்

கரைதுறைப்பற்று பிரதேசசபையினரால் நியாப்-II திட்டத்தின் கீழ் முள்ளியவளைப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.மேற்படி திட்டத்தின் கீழ் முள்ளியவளை கிழக்கு, புதற்குடா, முறிப்பு , ஆறுமுகத்தான்குளம் ஆகிய நான்கு கிராமங்களிலும் பொது நோக்கு மண்டபம் பொதுக்கிணறுகள் என்பன அமைப்பதற்கான ஆரம்பவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி வேலைத்திட்டங்களை கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முள்ளியவளை உப அலுவலகத்தினால் நெறிப்படுத்தப்பட்டு அவ்வவ் கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம மாதர்சங்கங்கள் என்பவற்றால் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதேவேளை கரைதுறைப்பற்று பிரதேசசபை நிதி ஒதுக்கீட்டில் முள்ளியவளை மயானம், வற்றாப்பளை பொதுச்சந்தை, முள்ளிவாய்க்கால் உப பிரதேசசபை அலுவலக மலசல கூடம் என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனம்; முல்லை. நகரில் முக்கிய கலந்துரையாடல்

வவுனியாவில் இடம்பெற்ற தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டிற்கு வலுச்சேர்க்கும் வகையில் முல்லைத் தீவில் நடைபெறவுள்ள எழுச்சி விழாவிற்கான முன்னேற்பாடான முக்கிய கலந்துரையாடல் முல்லைத்தீவில் இடம்பெற்றது.

கடந்த வெள்ளியன்று முல்லைத் தீவு மகாவித்தியாலயத்தில் முல்லை கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துரைகளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் மரியராசா, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், முல்லை உதவிப் பங்குத்தந்தை அருட்திரு திருமகன், வர்த்தக சங்கத்தலைவர் மனோ, உதவிக்கல்விப் பணிப்பாளர் அருணாசலம், முல்லை மகாவித்தியாலய உபஅதிபர் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் 14ஆம் திகதி முல்லைத்தீவில் நடைபெறவுள்ள எழுச்சிப் பிரகடனம் தொடர்பாகவும் முல்லைத்தீவு நகர புனரமைப்புத் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இதில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)

## லண்டனில் தமிழ் இளைஞர் கொலை நால்வருக்கு ஆயுள் தண்டனை

லண்டனில் படுகொலை செய்யப்பட்ட சோதிலிங்கம் திருக்குமாரின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த நான்கு தமிழ் இளைஞர்களுக்கும் லண்டன் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

சுகந்தன் நடராஜா (வயது-24) சாந்தன் (விஜயகுமார்), தர்மலிங்கம் (வயது -28), ரஞ்சன் சண்முகநாதன் (வயது -26), சசிகரன் செல்வரட்ணம் (வயது-21) ஆகிய நால்வருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி குறொய்டனில் திருக்குமார் சோதிலிங்கத்தை கொலை செய்த குற்றத்துக்காக இவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குற்றம் சாட்டப்பட்ட மற்றுமொருவரான மோகனராஜா தங்கராஜா (வயது -28) வுக்கு எதிரான குற்றச்சாட்டு மார்ச் மாதம் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சி.க.கூ 2- ஆவது வங்கிக்கிளை புதுக்குடியிருப்பில் திறந்துவைப்பு

முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்க இரண்டாவது வங்கிக்கிளை புதுக்குடியிருப்பில் புதனன்று காலை 11.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.முல்லை மாவட்ட சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கா.குணசிங்கம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லை. மாவட்டகூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.மோ.சிவமயம் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றினார்.கட்டடத்தினை முல்லை. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.மோ.சிவமயம் நாடாவினை வெட்டித்திறந்துவைத்தார். கருத்துரை களை தமிழீழ நிர்வாகசேவை முல்லை. மாவட்ட பொறுப் பாளர் முரளி, வன்னி பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் வேதவனம், முல்லை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா.தியாகராஜா ஆகியோர் நிகழ்தினார்கள்.நன்றியுரையினை சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்க செயலாளர் ஸ்ரான்லி நிகழ்த்தினார். இந்நிகழ்வில் கூட்டுறவுச் சங்கப் பிரதி நிதிகள் அனைவரும் கலந்துகொண்டனர். (20)

---




**25.08.2005--31.08.2005**

### 25

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா, ஆப்கான் படைகள் கூட்டாக மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது 16 தீவிரவாதிகள் பலி.

பாக்தாத்துக்கு வடக்கேயுள்ள நகர் ஒன்றில் உள்ள உணவகத்தினுள், துப்பாக்கிதாரிகளால் ஆறு ஈராக்கியர்கள் சுட்டுக் கொலை.

பாகிஸ்தான் உள்ளூராட்சித் தேர்தலின் இரண்டாம்கட்ட வாக்கெடுப்பு 50 இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இடம்பெற்றபோது ஏற்பட்ட வன்முறைகளில் 22 பேர் பலி.

### 26

பிரான்சின் பரிஸ் நகரின் தென் பகுதியில் அமைந்துள்ள ஏழு மாடிக்கட்டடத்தில் பாரிய தீ விபத்து ஏற்பட்டதில் 17 பேர் பலி; 30 பேர் காயம்.

இந்தியாவில் முதற் தடவையாக நதி நீர் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.

நேபாளத்தின் மேற்கு மாவட்டமான கபில்பஸ்துவில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் பேருந்தில் பயணித்த ஆறு பயணிகள் பலி ;

### 27

ரஷ்யாவில் செச்சினிய கிளர்ச்சிவாதிகள் டாகஸ்தான் மாகாணத்திலுள்ள புகையிரத தண்டவாளமொன்றில் குண்டொன்றை வைத்ததில் புகையிரதத்தின் இயந்திரம் மற்றும் இரண்டு பெட்டிகளும் கவிழ்ந்தன அந்த புகையிரதத்தில் 400 பயணிகள் பயணம் செய்த போதும் உயிரிழப்பு ஏற்படவில்லை.


இயற்கை சீற்றம், சுற்றுச்சூழல் மாசு போன்றவற்றை கண்காணிக்க உதவிடும் செயற்கைக் கோளை ரஷ்யா விண்ணில் ஏவியது.

ஈராக்கிலுள்ள "அபுகரீப்" சிறைச்சாலையில் இருந்து ஆயிரம் கைதிகள் விடுதலை.

### 28

மும்பை நகரின் தெற்குப் பகுதியில் மென்ரோசினிமா என்ற திரையரங்கின் அருகில் இருந்த மூன்று மாடிக்கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் ஆறு பேர் பலி;

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இரண்டு நாள் பயணமாக ஆப்கானிஸ்தான் பயணம்.




இஸ்ரேலின் தென்பகுதி நகரான போஸ்கபோ நகரிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் இடம் பெற்ற தற்கொலைத்தாக்குதலில் இரண்டு படையினர் உட்பட பத்து பேர் காயம்.

பிலிப்பைன்சின் தென் பகுதிலுள்ள பசிலான் தீவிலுள்ள டுனா ரமோனா என்ற படகுத்துறையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் ஒன்பது சிறுவர் உட்பட 30 பேர் காயம்.

ஈராக் தலைநகர் பாத்தாத்தில் தீவிரவாதிகளுக்கும் அமெரிக்க துருப்புக்களுக்குமிடையில் கடும் துப்பாக்கிச் சமர் ஏற்பட்டதில் றொய்ட்டர் செய்திச் சேவை புகைப்படப்பிடிப்பாளர் ஒருவர் பலி.


வியட்நாமில் 60 ஆவது சுதந்திரதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈராக்கின் புதிய அரசியல் யாப்பு பாராளுமன்றில் சமர்ப்பிப்பு.

### 29

சார்க் உறுப்பு நாடுகளின் செய்தித் துறை அமைச்சர்களின் மாநாடு காத்மண்டுவில் ஆரம்பம்.

அமெரிக்காவின் மெக்சிக்கோ கடற்பகுதியில் உருவான "கத்ரினா" சூறாவளி காரணமாக இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் பலியானதுடன், ஒரு இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர்.



முன்னாள் பாக்தாத் ஆளுநர் அலி-ஹேதரியின்சகோதரர் மொஹமத் ராதி அல்-ஹேதரி மேற்குப்பாக்தாத்தில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொலை.

### 30

ஈராக்கின் மேற்குப் பகுதியில் அமெரிக்க இராணுவத்தினர் நடத்திய விமான தாக்குதலில் அல் ஹைதா இயக்கத்தின் முக்கியஸ்தர் அபு இஸ்லாம் பலி;

ஈராக்கில் சிரிய எல்லை அருகே அல்ஹைதா தீவிரவாதிகளின் மறைவிடங்கள் எனக்கருதப்படும் இடங்களில் அமெரிக்க விமானப்படையினர் நடத்திய தாக்குதலில் 56 இற்கும் மேற்பட்டோர் பலி, பலர் படுகாயம்.

### 31

மலேசியாவின் 48 ஆவது சுதந்திரதினம் மலேசியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈராக்கில் ஹதுமியா பள்ளிவாசலுக்கு முக்கிய தொழுகை ஒன்றிற்காக சென்ற ஷியா முஸ்லிம் மக்கள் மத்தியில் குண்டுதாரி ஒருவர் இருப்பதாகக் கூறப்பட்டதை அடுத்து நெரிசலில் சிக்குண்டும், உயிரைப்பாதுகாக்க அருகில் இருந்த ரைகிறிஸ் நதியில் கூட்டமாக குதித்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.



இந்தோனேசியாவில் சிறை வைக்கப்பட்டிருந்த ஆசேி மாகாண தீவிர வாதிகளில் ஏழுபதுக்கும் மேற்பட்டடோர் விடுதலை.

ஈராக்கிய தலைநகரான பாக்தாத்தில் ஷியா யாத்திரிகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில் ஏழு பேர் பலி; 36 பேர் காயம்

# இரு புதிய பிரதேச செயலகப் பிரிவுகளை அமைக்க யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் இரண்டு புதிய பிரதேச செயலக பிரிவுகளை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கணேஸ் தெரிவித்துள்ளார்.**

இரு புதிய பிரதேச செயலக பிரிவுகளை அமைப்பது தொடர்பான சிபார்சு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இது சம்பந்தமாக விரைவில் முடிவு எடுக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற பிரதேச செயலகங்களில் கோப்பாய் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலகங்கள் அதிகளவு கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டிருப்பதால் அந்தப் பிரதேச செயலகங்களில் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுவதுடன் தூர இடங்களில் இருந்து மக்கள் பிரதேச செயலகங்களுக்கு சென்று வருவதற்கு மிகவும் சிரமம் ஏற்படுகின்றது. இதனால் மக்களின் வசதி கருதி அச்சுவேலி, கொடிகாமம் போன்ற இருபுதிய பிரதேச செயலகப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த இரு புதிய பிரதேச செயலகங்களை அமைப்பதால் மக்கள் தமது தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்துகொள்ள முடியும் என அரச அதிபர் தெரிவித்துள்ளார். (கீ)

# மன்னாரில் தேசிய எழுச்சி மாநாட்டிற்கான ஏற்பாடு

(மன்னார்)

மன்னாரில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் அரசியல்துறை பொறுப்பாளர் இனியவன் தலைமையில் தேசிய எழுச்சிப் பேரவைகள் வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் தொழிலாளர்கள் இணையம், பிரதேச மக்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்டு வருகின்றன. (18)

# முன்பள்ளிகளுக்கு சர்வோதய நிதியுதவி

(மன்னார்)

மன்னாரிலுள்ள முன்பள்ளிகள் சிலவற்றிற்கு மன்னார் மாவட்ட சர்வோதய இயக்கம் மாதாந்தம் 1500 ரூபா வீதம் போசாக்கிற்கென நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு வருடமும் முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு 18 ஆயிரம் ரூபாவை வழங்கி வருகிறது. சாவற்கட்டு, புதுக்கமம், பேசாலை. நானாட்டான், முருங்கன் , அரிப்பு மாந்தை மேற்கு ஆகிய இடங்களில் முன்பள்ளி பாடசாலைகளுக்கே இந் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதனை மன்னார் நகர பிரதேச செயலாளர் ஊடாகவே இந் நிதி வழங்கப்பட்டுள்ளது. (18)

# வீதி அபிவிருத்திக்கு போதியளவு நிதியில்லை யாழ். இல் பல வீதிகள் அரைகுறையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள வீதிகள் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு பணிகளுக்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை. இதனால் வீதி அபிவிருத்திப் பணிகளை செய்து முடிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

யாழ். குடாநாட்டில் பெரும்பாலான வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றன. இத்தகைய வீதிகளைப் புனரமைப்பு செய்வதற்கு போதியளவு நிதி வசதியை அபிவிருத்தி அதிகார சபைக்கு அரசு ஒதுக்கவில்லை.

இதேவேளை, குடாநாட்டில் பல வீதிகள் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் வீதியை செப்பனிடு வதற்கு "தார்" கொள்வனவு செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதால் திருத்த வேலைகளை விரைவாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தார் கொள்வனவு செய்வதற்கு அரசு உரியகாலத்தில் தேவையான நிதி வழங்குவதில்லை. அதனால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் வீதிகளில் பெரும்பாலானவை அரைகுறையாகப் புனரமைப்பு செய்யப்படாமல் இருக்கின்றன.

கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது பல வீதிகள் பாதிப்படைந்திருக்கின்றன. அத்தகைய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய நிதியை அரசு இதுவரை காலமும் ஒதுக்கீடு செய்யவில்லை. இதனாலேயே வீதிகள் புனரமைப்பு செய்யப்படவில்லை எனத் தெரியவருகிறது. (கீ)

# யாழ்.இல் முஸ்லிம்கள் மீளக்குடியேற பொம்மைவெளியில் அரச காணி பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வன்செயல்களையடுத்து யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்களை மீளக் குடியேற்றுவதை ஊக்கவிக்கும் பொருட்டு அவர்களிற்கு அரச காணிகளை பங்கிட்டு வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்மீள் குடியமர்வு நடவடிக்கைக்கு ஏதுவாக புத்தளம் பகுதியில், யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வசித்து வந்த 47 முஸ்லிம் குடும்பங்கள் நோர்வே அகதிகள் பேரவையின் நிதியுதவியின் கீழ் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரிற்கும் யாழ். மாநகரின் புறநகர்ப்பகுதியான பொம்மைவெளிப் பகுதியிலுள்ள அரச காணிகளே பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இப்பொம்மைவெளிக் கிராமம், யாழ். நகரின் மையப் பகுதியிலிருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது.

இதேவேளை பொம்மைவெளியிலுள்ள பொது மண்டபத்தில் குறித்த அரச காணிகளை பகிர்ந்தளிப்பது தொடர்பான விசேட கூட்டமொன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் பணிமனையின் தலைவர் மௌலவி சுபியாண் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட காணி உதவிப் பதிவாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மேற்படி அரச காணி 184 துண்டுகளாக பிரிக்கப்பட்டு அனுமதிப் பத்திர அடிப்படையில் மீளக்குடியமர முற்படும் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

# குளங்கள் சில ஆழப்படுத்தப்பட்டுள்ளதால் கால்நடைகளின் குடி நீர்ப்பிரச்சினைக்குத் தீர்வு

(தீவகம்)

புங்குடுதீவுப்பகுதியில் கடும் வரட்சி காரணமாக குளங்கள், நீர் நிலைகள் வற்றியமையால் ஆயிரக் கணக்கான கால்நடைகள், குடி நீரில்லாமல் இறக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டதையடுத்து இரண்டு குளங்கள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. அப்பகுதி வாழ்மக்களும் வட இலங்கைச் சர்வோதய நிறுவனமும் பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையத்திடம் விடுத்த வேண்டு கோளுக்கமைய இணையத்தின் பிரமுகர்கள் நேரடியாக விஜயம் செய்து அப்பகுதி நிலைமைகளைப் பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு இணையத்தின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டை சச்சியா இரும்பக உரிமையாளரும், இணைய உபசெயலாளருமாகிய சி. சச்சிதானந்த ஐயரின் நிதியுதவி மூலம் புங்குடுதீவு நாவலடிப்பகுதியிலுள்ள இரண்டு நன்னீர்க்குளங்கள் சேறு எடுத்து ஆழப்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளன. இவற்றில் தற்போது சுமார் இரண்டு முதல் மூன்று அடி வரை ஆழத்திற்கு நன்னீர் கிடைக்கக் கூடியதாகவுள்ளது.

அதேசமயம் புங்குடுதீவுப் பகுதியிலுள்ள அடைகாத்த குளத்தினை (மைப்பகுதி) யாழ்ப்பாணம் வேணி களஞ்சியம், கோகுல் டிராண்ஸ்போட் ஆகிய நிறுவனங்களின் உரிமையாளராகிய கு.கங்கை வேணியன் சேறெடுத்து ஆழப் படுத்திக் கொடுத்துள்ளார்கள். இவர் பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு இணைய அமைப்பாளராவார்.

இதன் மூலம் புங்குடுதீவுப் பகுதியில் கால்நடைகளின் குடிநீர்ப் பிரச்சினை குறிப்பிடத்தக்களவு நீங்கியுள்ளது. இதன் மூலம் கட்டாக்காலிகளாகத் திரிகின்ற கால்நடைகளும், புங்குடுதீவில் தற்போது வதியும் மக்களுக்குச் சொந்தமான கால்நடைகளும் நன்மையடைந்துள்ளன. (37)

# அவசரகாலச் சட்ட அமுலுக்குப் பின் யாழ்.இல் குற்றச் செயல்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் பின்னால் யாழ். குடாநாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து இருப்பதாக பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

வீடு புகுந்து கொள்ளையிடுதல், உந்துருளிகளில் சென்று சங்கிலிகளை அறுப்பது, பெண்களிடம் சேட்டைகள் விடும் சம்பவங்கள் அதிகரித்து இருப்பதாகவும், பொலிசாரோ பொது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல், குற்ற வழக்குகளையும் பதிவு செய்யாமல், குற்றவாளிகளைக் கைது செய்யாமல் இருந்து குற்றச் செயல்கள் அதிகரிப்பிற்கும், குற்றவாளிகளுக்கு பாதுகாப்பான ஒரு சூழலை குடாநாட்டில் தோற்றுவிக்கின்றனர்.

இதனால் நாளாந்தம் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும், இவற்றை கட்டுப்படுத்த முயற்சிக்காத பொலிசாரே யாழ். குடாநாட்டில் மூலைக்கு மூலை படையினருடன் இணைந்து வீதி சோதனையில் மட்டும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (28)

# குடிநீர் விநியோகத்தை ஏற்படுத்தக் கோரியும் நடவடிக்கை இல்லாததால் மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

ஆரிய குளம் முற்போக்கு வாலிபர் சங்க எல்லைக்குட்பட்ட மக்கள் குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கிராமத்திற்கு அண்மைக் காலமாக குடிநீர் வசதி இன்மையால் பெரும் அசௌகரியங்களை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

யா/உ/6401 திரு.வைத்திலிங்கம் மார்க்கண்டு.
யா/உ/6411 திரு.அப்பையா இராசநாயகம்.
யா/உ/6418 திருமதி.பாக்கியம் நாகலிங்கம்
யா/உ/6420 திருமதி.இராசம்மா கந்தையா.
யா/உ/6430 திருமதி.அனனம்மா செல்வரட்ணம்.
யா/உ/6443 திரு.வைரமுத்து சிவனடியார்.
யா/உ/6445 திரு.மரியான் பேதுரு யுவானி.
யா/உ/6447 திருமதி.சின்னாச்சி காத்தி.
யா/உ/6464 திருமதி.கனகம்மா பொன்னுத்துரை.
யா/உ/6480 திரு.அருளப்பு தேவசகாயம்.
யா/உ/6502 திரு.இராமு இராசமணி.
யா/உ/6503 திரு.சண்முகம் சின்னத்துரை.
யா/உ/6505 திருமதி.பூமணி வல்லிபுரம்.
யா/உ/6512 திருமதி.பூமணி மயில்வாகனம்.
யா/உ/6540 திருமதி.நல்லம்மா ஐயாத்துரை.
யா/உ/6552 திரு.மாரிமுத்து சத்தியநாதன்.
யா/உ/6583 திரு.கணபதிப்பிள்ளை மகாலிங்கம்.
யா/உ/6586 திரு.சிவகுரு பரமசிவம்.
யா/உ/6587 திரு.சுப்பையா செல்வரத்தினம்.
யா/உ/6599 திரு.பொன்னம்பலம் செல்லத்துரை.
யா/உ/6605 திரு.ஞானப்பிரகாசம் தேவசகாயம்.
யா/உ/6619 திருமதி.இரத்தினபூபதி சபாரத்தினம்.
யா/உ/6635 திரு.கோவிந்தசாமி கோணேஸ்வரன்.
யா/உ/6643 திரு.விஸ்வலிங்கம் பொன்னம்பலம்.
யா/உ/6650 திரு.நடேசு புலேந்திரராசா.
யா/உ/6653 திரு.சண்முகம் குணரத்தினம்.
யா/உ/6655 திரு.கபிரியேல் அருளானந்தம்.
யா/உ/6679 திருமதி.கனகம்மா செல்லையா.
யா/உ/6714 திரு.கணபதிப்பிள்ளை நவரத்தினம்.
யா/உ/6715 திரு.கதிர்காமர் செல்லையா.
யா/உ/6724 திருமதி.பிலோமினா பீற்றர்.
யா/உ/6743 திருமதி.சின்னம்மா அப்புத்துரை.
யா/உ/6747 திரு.முருகேசு இராசையா.
யா/உ/6772 திரு.செல்லப்பா பாலசுந்தரம்.
யா/உ/6785 திரு.மாணிக்கம் செல்வரத்தினம்.
யா/உ/6805 திரு.மயில்வாகனம் கனகசுந்தரம்.
யா/உ/6822 திருமதி.இராசாத்தி நடராசா.
யா/உ/6847 திரு.நாகமணி கற்கண்டு.
யா/உ/6848 திருமதி.புஸ்பரத்தினம் வயித்திலிங்கம்.
யா/உ/6861 திரு.நாகலிங்கம் இளையதம்பி.
யா/உ/6866 திருமதி.பூமணி சோமசுந்தரம்.
யா/உ/6871 திருமதி.அன்னப்பிள்ளை வல்லிபுரம்.
யா/உ/6876 திரு.செல்லையா சீவரத்தினம்.
யா/உ/6889 திருமதி.தங்கரத்தினம் சபாரத்தினம்.
யா/உ/6891 திரு.கந்தையா திருச்சிற்றம்பலம்.
யா/உ/6900 திருமதி.பாக்கியரத்தினம் காசிநாதர்.
யா/உ/ 6915 திருமதி.மாணிக்கம் இராசம்மா.
யா/உ/6924 திருமதி.பாக்கியம் வைத்திலிங்கம்.
யா/உ/6932 திருமதி.இராசமணி சிவபாதசுந்தரம்.
யா/உ/6934 திருமதி.கனகம்மா நடராசா
யா/உ/6942 திருமதி.பரஞ்சோதி வேலுப்பிள்ளை.
யா/உ/6946 திருமதி.நல்லம்மா தம்பிராசா.
யா/உ/6948 திருமதி.மனோன்மணி ஐயாத்துரை.
யா/உ/6953 திருமதி.செல்வரத்தினம் கந்தையா.
யா/உ/6971 திருமதி.இராசம்மா சண்முகலிங்கம்.
யா/உ/6988 திரு.முருகன் தம்பிஐயா.
யா/உ/6990 திரு.கதிரவேலு ஜோன்துரைராசா.
யா/உ/6994 திரு.இளையதம்பி பொன்னம்பலம்.
யா/உ/7013 திருமதி.திரவியம் பொன்னுத்துரை.
யா/உ/7024 திருமதி.நாகேஸ்வரி கணபதிப்பிள்ளை.
யா/உ/7047 திரு.வல்லிபுரம் செல்லத்துரை.
யா/உ/7073 திரு.தம்பிப்பிள்ளை கந்தையா.
யா/உ/7081 திரு.கணபதிப்பிள்ளை கனகரத்தினம்.
யா/உ/7090 திரு.வயித்திலிங்கம் கணபதிப்பிள்ளை.
யா/உ/7102 திரு.சுப்பையா சிங்கராசா.
யா/உ/7106 திருமதி.பரமேஸ்வரி முத்துக்குமாரசுவாமி.
யா/உ/7110 திருமதி.சொர்ணம்மா இரத்தினம்.
யா/உ/7121 திரு.செல்லையா சோமசுந்தரம்.
யா/உ/ 7129 திருமதி.இராசம்மா நன்னியர்.
யா/உ/7145 திருமதி.நாகரத்தினம் நவரத்தினம்.
யா/உ/7149 திருமதி.பொன்னம்மா இராசையா.
யா/உ/7153 திருமதி.அழகம்மா நடராசா.
யா/உ/7160 திரு.இராமநாதன் பாலகிருஸ்ணன்.
யா/உ/7188 திரு.கதிரன் கணபதிப்பிள்ளை.
யா/உ/7189 திருமதி.சிவகாமி வேலுப்பிள்ளை
யா/உ/7203 திரு.ஐயாத்துரை இராசையா.
யா/உ/7209 திருமதி.அற்புதலட்சுமி கந்தசாமி.
யா/உ/7216 திருமதி.ராசேஸ்வரி அப்பாத்துரை.
யா/உ/7219 திரு.சபாரட்ணம் முருகேசபிள்ளை.
யா/உ/7241 திரு.கணபதி சின்னட்டி.
யா/உ/7255 திருமதி.இலட்சுமி துரையப்பா.

தொடரும்...





இளந்தாரகை அணி


தோழர்கள் அணி

# 15 ஓவர் மென்பந்து கிரிக்கெட் இறுதிப் போட்டி

## தோழர்கள் - இளந்தாரகை அணிகள் தெரிவு

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கம் நடாத்திவரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு தோழர்கள், இளம்தாரகை அணிகள் தெரிவாகியுள்ளன. இறுதிப் போட்டி இன்று நடைபெறுகின்றது.

தருமபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் மேற்படி போட்டியில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளில் சென்யூட் அணியை தோழர்கள் அணியும், கனகபுரம் அணியை இளந்தாரகை அணியும் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

முதலாவது அரையிறுதியில் முதலில் ஆடிய தோழர்கள் அணி 14.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யூட்சன் 36 ஓட்டங்களையும், சுரேஷ் 29 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சுமன், கனகராஜ் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், தவேந்திரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். ரன் அவுட் முறையில் நான்கு விக்கெட்டுக்கள் இழக்கப்பட்டன.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சென்யூட் அணி 11.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தனர். துடுப்பாட்டத்தில் சுகந்தன் ஒன்பது ஓட்டங்களையும், சகீதரன் 14ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கார்த்தீபன் நான்கு விக்கெட்டுக்களையும், தர்மேந்திரா மூன்று விக்கெட்டுக்களையும், சிவா, பிரியதர்சன், திவ்வியதீபன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இரண்டாவது அரையிறுதியில் முதலில் ஆடிய கனகபுரம் அணி 12 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 32 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் எவருமே இரட்டை இலக்க எண்ணிக்கையைப் பெறவில்லை. பந்து வீச்சில் மதன் நான்கு விக்கெட்டுக்களையும், சாந்தன், லோகீசன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இளம்தாரகை அணி 5.4 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் சாரங்கன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக சுபானந், குமார் ஆகியோர் கடமையாற்றினர்.

(சு)


விளையாட்டு

# நியூசிலாந்து கிரிக்கெட் சபைக்கு

## ஆறு மில்லியன் டொலர் நஷ்டம்



நியூசிலாந்து கிரிக்கெட் சபை அண்மையில் மதிப்பிடப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் இவ்வருடம் அதற்கு ஆறு மில்லியன் டொலர் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. எனினும் எதிர்வரும் 12 மாதங்களில் அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அந்நாட்டு கிரிக்கெட் சபை நிறைவேற்று அதிகாரி மார்ட்டிசினடின் தெரிவித்துள்ளதுடன் இவ்வாறான நஷ்டமேற்பட்டதற்கு சிறிலங்கா அணி கடந்த டிசம்பரில் பங்குபற்றவிருந்தவேளை ஏற்பட்ட சுனாமிப் பேரனர்த்தமே என்றும் தெரிவித்துள்ளார். காரணம் அப்போட்டிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுவதன் மூலம் கிடைக்கவிருந்த வருமானம் கிடைக்காமல் போனமை என்றும் அவர் தெரிவித்துள்ளார். நியூசிலாந்து- சிறிலங்கா அணிகள் ஐந்து ஒரு நாள் போட்டிகளில் பங்குபற்ற இருந்த போதும் சுனாமியால் நான்கு போட்டிகள் இரத்துச்செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து கால்பந்து அணியின் கோல் காப்பாளர் நீக்கம்

2006ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்காக அயர்லாந்து-வேல்ஸ் அணிகளுடன் நடைபெறவிருக்கும் தகுதிப் போட்டியில் இங்கிலாந்தின் கோல் காப்பாளர் டேவிட்ஜேம்ஸ் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் டென்மார்க் அணியுடன் நடைபெற்ற போட்டியின் போது அவர் சிறப்பாக செயற்படவில்லை என்ற காரணத்தால் அவரை நீக்கிவிட்டு கிறீஸ் கிறிக்லண்ட்டை நியமிக்கவுள்ளதாக அணியின் பயிற்றுநர் கோறன் எரிக்சன் தெரிவித்துள்ளார்.

மேற்படி தகுதிப்போட்டித் தொடரில் வரும் ஐந்தாம் திகதி வேல்ஸ் அணியுடனும் ஏழாம் திகதி அயர்லாந்து அணியுடனும் இங்கிலாந்து அணி மோதும். இதற்காக 25 பேர் கொண்ட அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# மூன்றாவது போட்டியிலும் பங்களாதேஷுக்குத் தோல்வி

## தொடரின் நாயகனாக உபுல் தரங்க தெரிவானார்





பங்களாதேஷ் - சிறிலங்கா அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான ஒரு நாள் போட்டியிலும் சிறிலங்கா அணி வெற்றிபெற்று தொடரை 3-0 என்ற நிலையில் கைப்பற்றியுள்ளது.

எஸ்.எஸ்.சி. விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பாடிய பங்களாதேஷ் அணி 38.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நபீஸ் அதிகபட்சமாக 21 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் மஹ்ரூப், பெர்னாண்டோ தலா மூன்று விக்கெட்டுக்களையும், உபுல் சந்தன, டில்சான் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

109 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாடிய சிறிலங்கா மழை குறுக்கிட்டதால் டக்வேத்-லூயிஸ் விதிக்கமைய வெற்றிபெற்றது. அது நான்கு விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப்பெற்றது. அவிஸ்க குணவர்த்தன 52 ஓட்டங்களையும், திலான் சமரவீர 16 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார 17 ஓட்டங்களையும் பெற்றனர். தபாஸ் பைசியா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் சிறப்பாட்டக்காரராக டில்கார பெர்னாண்டோ தெரிவானார். போட்டித் தொடர் நாயகனாக உபுல் தரங்க தெரிவானார். சிறிலங்கா அணியை ஜெயவர்த்தன வழி நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# LBW முறையீட்டுக்கு மூன்றாவது நடுவரின் தீர்ப்பு

## அவுஸ். - உலக 11 பேர் போட்டியில் அறிமுகம்



வரும் ஒக்ரோபர் மாதம் மெல்பேர்னில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய - உலக 11 பேர் அணிகள் பங்குபற்றும் சுப்பர்சீரிஸ் கிரிக்கெட் போட்டிகளின்போது இலக்கை மறைக்கும் குற்றச்சாட்டின் பேரில் ஆட்டம் இழக்கும் (LBW) முறைக்கு மூன்றாவது நடுவரிடம் உதவி கோரப்படும் முறை அறிமுகப்படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நடைபெறும் ஆஷஸ் தொடரில் ட்ரன்ஸ் பிறிஜில் நடைபெற்ற அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளின் நான்காவது டெஸ்ட் போட்டியின்போது இந்த ஆட்டமிழப்புத் தீர்ப்பில் பல தவறுகள் இழைக்கப்பட்டதால் சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழு கிரிக்கெட் சபையிடம் அதற்கேற்ற மாற்று வழிகளை அறிமுகப்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளதையடுத்து மேற்படி மூன்றாவது நடுவரின் தீர்ப்பு பெற்றுக்கொள்ளும் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி பந்து நிலத்தில் விழும் இடம் அது பட்ட இடம் பற்றிய சந்தேகங்கள் மூன்றாவது நடுவர் மூலம் சந்தேகமின்றி அறிந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



# அரும்புகள் கால்பந்து சுற்றுப் போட்டி-2005

## விண்ணப்பிக்க வேண்டுகை

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் அரும்புகள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி-2005 கிளிநொச்சியில் நடாத்தப்படவுள்ளது. 13,15 வயதுக்குட்பட்டோருக்கான இச் சுற்றுப் போட்டியில் வன்னிப்பெருநிலப்பரப்பைச் சேர்ந்த பாடசாலைகள் மற்றும் கழகங்கள் பங்குபற்றலாம். செப்ரெம்பர் 27,28,29ஆம் திகதிகளில் நடைபெறும் இப்போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை கிளிநொச்சியிலுள்ள இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அரும்புகள் உதைபந்துப் பயிலரங்க இணைப்பாளர் தெரிவிக்கின்றார். இப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 15ஆம் திகதி ஆகும்.

# அவுஸ். முன்னாள் வீரர் ஸ்ரீவ்வோவுக்கு

## சிறந்த தந்தைக்கான விருது

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ்வோ அந்நாட்டின் சிறந்த தந்தை என்ற பட்டம் வழங்கிகௌரவிக்கப்பட்டுள்ளார்.

அவர் கிரிக்கெட்டில் காட்டிய திறமைக்கு அன்றி அவர் அநாதைச் சிறுவர்களின் மேம்பாடு கருதி ஆற்றிய சேவைக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற வருடாந்த தந்தையர் தினக் கொண்டாட்டத்தின்போது அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. அவருக்கு 2004 ஆம் ஆண்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றதும் அவுஸ்திரேலியாவின் சிறந்த மனிதர் என்ற விருதும் வழங்கப்பட்டது. இவர் அந்நாட்டு சிறுவாநலன் அமைப்புக்கள் அனைத்திலும் பங்கேற்று சேவை செய்து வருவதுடன் கொல்கத்தாவில் உள்ள உதயன் இல்லத்துக்கும் நிரந்தரமாகத் தொண்டாற்றி வருகிறார்.

# ஆசிய தடகள சம்பியன் போட்டி

## அஞ்சு ஜோய்க்கு தங்கப் பதக்கம்

கொரியாவில் இந்தியானா நகரில் நடைபெற்றுவரும் 16ஆவது ஆசிய தடகள சம்பியன் போட்டியில் நீளம் தாண்டுதலில் இந்தியாவின் அஞ்சுஜோய் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற போட்டியில் அவர் 6.65 மீற்றர் நீளம்தாண்டி புதிய சாதனை படைத்தார். இவருக்கு அடுத்தபடியாக பிலிப்பைன்ஸ் வீராங்கனை மொரிஸ் செல்லா டோரஸ் 6.63 மீற்றர் நீளம் தாண்டி வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றார். ஜப்பானைச் சேர்ந்த குமிடிகோ அய்த்தா 6.52 மீற்றர் நீளம் தாண்டி வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

## சிந்தனைக்கு



தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக்கொள்ளும்பொழுதுதான் ஒரு தேசம் தனக்கே உரித்தான-தனித்துவமான-ஆளுமையைப் பெறுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 05.09.2005

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@yahoo.com


## அதிகாரத்தின்முன் மானம்...?

சனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் கூட்டு ஏற்படுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. இக்கூட்டை சனாதிபதி சந்திரிகா மனத்தளவிலோ அல்லது வெளிப்படையாகவோ விரும்பினாரோ இல்லையோ, இக்கூட்டு பெரும்பாலும் முடிவு செய்யப்பட்டதொன்றாகியுள்ளது.

இதேவேளை, இத்தேர்தல் கூட்டுக்குறித்து பெரிதும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. மானம், தன்மானம் என்பனவற்றிற்கு அப்பால் அரசியல்வாதிகளுக்கு அதிகாரமே முதன்மையானதென்பது தற்பொழுதுதான் அறியப்பட்ட விடயம் அல்ல. ஆகையினால் அரசியல் அதிகாரத்திற்காக இவர்கள் கூட்டணி சேர்வது ஒன்றும் எதிர்பார்க்க முடியாததல்ல.

ஆகையினால், சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. ஆகிய இரண்டும் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைத்தல் என்ற ரீதியில் அவர்களுக்குக் கூட்டணி அவசியமானதாகும். ஆனால், தேர்தலின் பின் இவர்கள் கூட்டாக இயங்குவார்களா? அன்றி தனித்தியங்குபவர்களா என்பது பற்றி தற்பொழுது எதுவும் கூறவேண்டிய தேவையில்லை. அது தற்பொழுது பேசப்பட வேண்டிய அவசியமும் இல்லை.

இதேவேளை இவ்விரு கட்சிகளும் கூட்டணி அமைக்க முன்வந்துள்ளமையானது வெளிப்படுத்தும் முக்கிய விடயமாக இருப்பது, இவர்களுக்கு இடையில் கருத்தியல் ரீதியில் பெரும் வேறுபாடு எதுவும் இல்லை என்பதே ஆகும். அதாவது கடந்தமுறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைவிட்டு ஜே.வி.பி. வெளியேறியமையானது, இருதரப்பும் சேர்ந்து பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக மேற்கொண்ட சதிமோசடியே ஒழிய இவ்விடயத்தில் இருதரப்பிற்குமிடையில் பெரும் கொள்கை முரண்பாடு ஏற்பட்டதனால் அல்ல.

இதன் பின்னர் தற்பொழுது சனாதிபதி தேர்தலில் கூட்டுச் சேருவது பற்றிய பேச்சுக்கள் வந்தபோது ஜே.வி.பியால் 12 நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால், உண்மையில் இவை வெறும் கண்துடைப்பிற்கானவையே. உண்மையில் இருதரப்பும் பழைய உடன்பாட்டைப் புதுப்பித்துக் கொண்டன என்பதே சரியானதாகும்.

இதேவேளை இக்கூட்டணி உருவாவதன் மூலம், முக்கியமானதொரு விடயமும் வெளிப்படுத்தப்படுவதாயுள்ளது. அதாவது இக்கூட்டணி சனாதிபதித்தேர்தலில் வெற்றிபெறுமானால் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வென்பது சாத்தியமற்றதென்பதே அதுவாகும். இதற்காக ஐ.தே.க. தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்றால் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என இங்கு கூறவரவில்லை.

தேர்தலின் முன்பாக இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்று காணப்படும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ வாக்குறுதிகளை அளிக்கலாம். இதுபோன்ற வாக்குறுதிகள் ஏற்கனவே அவரால் அளிக்கப்பட்டும் உள்ளன. எடுத்துக்காட்டாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும், இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணப்படும் என மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இது நடைமுறையில் சாத்தியமற்றது. இதற்கு ஜே.வி.பி ஒருபோதுமே அனுமதிக்கப்போவதில்லை. தமிழ்மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளையே புறம் தள்ளிய ஜே.வி.பி. அரசியல் தீர்வு தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவுடன் ஒத்துழைக்கும் எனக் கூறுவதற்கில்லை. மகிந்த ராஜபக்ஷகூட இதனைத் தெரிந்துகொள்ளாமலில்லை. இதேவேளை மகிந்த ராஜபக்ஷகூட இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றைக் காண்பதில் ஆர்வமுள்ளவர் எனக்கூறிவிடுவதற்கு இல்லை. அவ்வாறு இருந்திருப்பாரேயானால் யுத்தநிறுத்த அமுலாக்கல் தொடர்பான பேச்சுவார்த்தைகளை அவர் நடாத்த முற்பட்டிருக்கலாம். ஆனால், பொதுக்கட்டமைப்பு விவகாரத்திலோ அன்றி யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பான விடயத்திலோ மகிந்த ராஜபக்ஷ அக்கறை காட்டியதாக இல்லை.

ஆகையினால், ஜே.வி.பி யுடன் கூட்டணி வைத்தால் மட்டும்தான் மகிந்த ராஜபக்ஷவால் இனப்பிரச்சினை விவகாரத்தில் முன்னேற்றம் காணமுடியாமல்போகும் என்பதல்ல. மகிந்த ராஜபக்ஷ தனித்து நின்று வென்றாலும்கூட அவர் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அக்கறை காட்டுவாரா? என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் அவர் தன்னையொரு பௌத்த சிங்களவராகவும், அதன் காவலாளராகவும் காட்டிக்கொள்வதிலேயே முனைப்புக் காட்டிவருகிறார்.

சிறிலங்காவின் அரசியல் போக்கு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதை நோக்கி முன்னேறுவதற்கான சந்தர்ப்பத்தைக் கொண்டதாக இல்லை. ஐ.தே.கட்சி சிலவேளை சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துத் தணிந்த குரலில் பேசக்கூடும். ஆனால் ஐ.தே.க. கூட யுத்தநிறுத்தத்தினால் விளையக்கூடிய நன்மையை அனுபவிக்கத் தயாராகவுள்ளதேயொழிய இனப்பிரச்சினைத் தீர்வில் முன்னேற்றம் காணும் அளவிற்கு எதையும் முன்னெடுப்பதாக இல்லை. இந்நிலையில் இச்சனாதிபதித் தேர்தலில் முன்னைய சனாதிபதித் தேர்தலில் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படும் எனப் பேசப்பட்ட அளவில்கூட பேசப்படுமா? என்பது சந்தேகமே. ஏனெனில் அந்தளவிற்கு இன்று பௌத்த – சிங்களப் பேரினவாத சக்திகள் திரட்சி பெற்றுள்ளன.

# சனாதிபதியைத் தீர்மானிப்பவர்கள் தொண்டமானோ ஹக்கீமோ அல்ல

## - ஜாதிகஹெல உறுமய செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை எமது நாட்டின் சனாதிபதியைத் தீர்மானிப்பவர்கள் தொண்டமானோ, அல்லது ஹக்கீமோ அல்ல. மாறாக சிங்கள-பௌத்த சக்தியான ஜாதிக ஹெல உறுமயவே தீர்மானிக்கும் சக்தியாக விளங்கும். அது மட்டுமல்ல வெள்ளை உடை உடுத்திக் கொண்டு மலர்த் தட்டுக்களைத் தூக்கிக் கொண்டு விகாரைகளுக்குச் சென்று ஏமாற்றுவதால் வெற்றிபெற முடியாதென்பதையும் வேட்பாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: கடல்கோளுக்குப் பின்னர் தேசிய மற்றும் வெளிநாட்டுச் சக்திகள் நம்மை அடிமைப்படுத்தவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. மறுபுறம் மதமே இல்லை என்ற மார்க்ஸிய வாதிகளால் எமது இளம் சமூகம் மூளைச்சலவை செய்யப்பட்டு சிங்கள பௌத்தர்களை அழிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இன்று பௌத்தர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஆபத்துக்கள் உருவாகியுள்ளன. எனவே, எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் சிங்கள - பௌத்த மக்கள் தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வேட்பாளரையே ஆதரிக்க வேண்டும். பொதுக்கட்டமைப்பு மூலம் புலிகளுக்கு கிரீடம் சூட்டவிருந்தனர். அதனை நாம் தடுத்து நிறுத்தினோம். தொண்டமான், ஹக்கீம் எமது நாட்டுத் தலைமையை தேர்ந்தெடுக்கும் காலம் இப்போ மலையேறிவிட்டது. இது சிங்கள பௌத்தர்களாகிய எமக்கு கிடைத்த வெற்றி ஆகும் எனவும் தெரிவித்தார்.

# தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்பே வேட்பாளர் பெயரை அறிவிப்போம்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே தமது வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படும் என்று ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமய வழிபாட்டுக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் பௌத்த பிக்குகள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர். அத்துரலிய ரத்ன தேரர், எல்லாவல மேதானந்த தேரர், ஓமல்பே சோபித தேரர் உள்ளிட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்ற போதும் சில ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் இக்கூட்டத்தைப் புறக்கணித்தனர். முன்னதாக சனிக்கிழமை மாலை ஹெல உறுமயவின் தேர்தல் நிலைப்பாடு அறிவிக்கப்படும் எனக் கூறப்பட்டு வந்தது. ஆனால் அத்தகைய அறிவிப்பு வெளியிடப்படவில்லை. (32)

# சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்க போ.க.கு. வலியுறுத்து

சமாதான பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ஃவ்ஸ் டொட்டியர் கருத்து தெரிவிக்கையில:-

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இரு தரப்பினராலும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

எப்படியிருந்த பொழுதிலும், துரதிர்ஷ்டவசமாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான நேரம் மற்றும் இடம் குறித்து இணக்கப்பாடு காணப்படாதது எமக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

எமது நிலைப்பாட்டின்படி சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்.

கடந்த சில மாதங்களாக இடம்பெற்று வரும் கொலைகள், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் சூழலை பெரிதும் பாதிக்கின்றது எனவும் தெரிவித்தார். (32)

# ஜே.வி.பி யுடனான பேச்சுக்கள் முடிந்தபின்பே ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை

## சிறிலங்கா சுதந்திரக்கட்சி முடிவு

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜே.வி.பியுடனான பேச்சுக்களை நிறைவு செய்த பின்னர் இதர கட்சிகளுடன் பேச்சு நடத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது.

ஜே.வி.பி முன்வைத்துள்ள 12 நிபந்தனைகளுக்கு பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் இருதரப்பினருக்குமிடையே அடுத்த வாரம் உடன்பாடு கையெழுத்தாகக்கூடும் எனத் தெரிவிக்கப்படும் நிலையில் ஜே.வி.பி, சுதந்திரக் கட்சி பேச்சுக்கள் முழுமையடைந்த பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் பேச்சுக்களை நடாத்துவது என்றும் சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

இரு கட்சிகளுடனும் இதுவரை உத்தியோகபூர்வமற்ற முறையில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அலரி மாளிகை வட்டாரத்தகவல்கள் கூறுகின்றன.

இந் நிலையில் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக தங்களின் நிலைப்பாட்டை அடுத்தவாரம் அறிவிக்கவுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்மான் அறிவித்துள்ளார்.

இன்று கட்சியின் செயற்குழுகூடி இது தொடர்பிலான முடிவை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது இரு பிரதான கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக தெரிவித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நாட்டிற்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய ஒருவருக்கே தமது கட்சி ஆதரவளிக்கும் என்று கூறியுள்ளார்.

# தங்களிடம் பிளவு இல்லை என்கிறார் அமைச்சர் மங்கள சமரவீர

சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவுக்கும் சந்திரிகா குமாரதுங்கவுக்கும் மோதல் ஏற்பட்டுள்ளதாக வெளியான செய்திகளை அமைச்சர் மங்கள சமரவீர மறுத்துள்ளார்.

ஜே.வி.பியின் ஆதரவைப் பெறுவதில் மங்கள சமரவீரவின் முயற்சியில் மகிந்த ராஜபக்ஷ தீவிரம் காட்டுவதைச் சந்திரிகா குமாரதுங்க ஏற்கவில்லை என்று சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. இதை கொழும்பு ஊடகங்களும் செய்தியாக வெளியிட்டிருந்தன.

இந்தப் பின்னணியில்தான் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தைச் சந்திரிகா குமாரதுங்க அவசரமாக நேற்றுக் கூட்டியதாக கூறப்பட்டது.

ஆனால் இதை மறுத்துள்ள மங்கள சமரவீர, சனாதிபதி சந்திரிகாவின் வேட்பாளர்தான் மகிந்த ராஜபக்ஷ. இருவருக்கும் இடையில் எதுவித மோதலும் இல்லை. நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக நின்று மகிந்த ராஜபக்ஷவுக்காக தேர்தல் பணியாற்றுகிறோம். எங்களிடையே பிளவுகளை உருவாக்க ஊடகங்கள் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி மேற்கொள்கிறது எனக் கூறினார்.



தமிழீழக் கடற்படையின் துணைப்படையின் இரண்டாவது அணியினருக்கான பயிற்சி நிறைவு நிகழ்வில்....

# இருதய நோய் சிகிச்சைக்கு தொடர்பு கொள்ளக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இன்று முதல் எட்டாந்திகதி வரை காலை8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை அமெரிக்காவில் இருந்து வருகைதந்துள்ளஇருதயமருத்துவ நிபுணரினால் நோயாளர்கள் பார்வையிடப்படவுள்ளனர்.விசேட கருவியின் துணை கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. குறிப்பாக உயர்குருதியமுக்கம், மாரடைப்பு,இருதயநோய்கள், இருதயத்தில் துவாரம்,இருதய வால்பு பழு தடைந்தமைபோன்ற நோய்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. பயன்பெறவிரும்புவோர் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை வெளி நோயாளர் பகுதியுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் மருத்துவ மனை பணிப்பாளர் வேண்டியுள்ளார். (சோ)

# விசேட அதிரடிப்படையினரின் உதவியுடனேயே அரசியல்துறை பணிமனை மீது தாக்குதல்

## பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குற்றச்சாட்டு

தமது அரசியல்துறை அலுவலகம் மீது நேற்றுக்காலை தாக்குதல் நடத்திய ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்கள் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாமிலிருந்தே வந்தவர்கள் என்று விடுதலைப் புலிகளின் பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கமலக்கண்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றுக்காலை தமிழீழவிடுதலைப் புலிகளின் பட்டிருப்பு கோட்ட அரசியல்துறை அலுவலகம் மீது ஆயுதக்குழுவொன்றினால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு மற்றும் கைக் குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கமலக்கண்ணன் ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது:

நேரம் சுமார்காலை 6.30 மணி இருக்கும். நான் உட்பட நான்கு அரசியல்துறை போராளிகள் அலுவலகத்திலிருந்தோம். நாங்கள் தேநீர் அருந்திக்கொண்டிருக்கையில் பின் பக்கமாக நின்ற போராளியொருவர் குறிப்பிட்ட ஆயுதபாணிகளின் வருகையைக் கவனித்து ஓடி வந்தார்.

அந்த ஆயுதபாணிகள் இருவரும் உந்துருளியிலேயே வந்திருந்தார்கள். அந்நேரம் இதனை அவதானித்த நாங்கள் தப்பியோடிய சமயம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எமது போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இச்சம்பவத்தைப் பொறுத்தவரை குறிப்பிட்ட ஆயுதபாணிகள் சிறிலங்கா அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ் தேச விரோதக் குழுவினர் விசேட அதிரடிப் படையின் ஒத்துழைப்புடன் நடந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் தாக்குதல் முடிந்த பின்பு சுமார் 20 நிமிடங்கள் வரை தங்கியிருந்துள்ளார்கள். உடமைகளைத் தீவைத்து, நொருக்கி சேதப்படுத்தியுள்ளார்கள். பின்பு வந்த திசையில் திரும்பாமல் மட்டக்களப்பு பக்கமாக உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளார்கள்.

விசேட அதிரடிப்படையினர் குறிப்பிட்ட நபர்கள் சென்ற பின்பு தான் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு வந்துள்ளார்கள். உரிய நேரத்தில் வந்திருந்தால் அவர்களைச் சுட்டுக்கொன்றிருக்க முடியும். அல்லது கைது செய்திருக்க முடியும்.ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றார். இதற்கிடையில் இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு நீதிபதி வினோபா இந்திரன் குறிப்பிட்ட இடத்தையும் வித்துடலையும் நேரில் சென்று பார்வையிட்டதோடு, மரண விசாரணையையும் மேற்கொண்டார். மரண விசாரணையின் பின்பு வீரச்சாவைத் தழுவிக்கொண்ட போராளியின் வித்துடல் விடுதலைப் புலிகளினால் பொறுப்பேற்கப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களும் இது தொடர்பாக விசாரணையை நேரில்சென்று மேற்கொண்டனர்.

விசேட அதிரடிப்படை முகாம், களுவாஞ்சிக்குடி காவல் நிலையம் ஆகியவற்றிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் விடுதலைப் புலிகளின் இந்த அலுவலகம் அமைந்துள்ளது.

24 மணி நேரமும் விசேட அதிரடிப்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் மற்றும் கண் காணிப்பிற்கு உட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### களுவாஞ்சிக்குடி...

போராளிஅருள்நேசன் களுவாஞ்சிக்குடி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டநிலையில் அங்குவீரச்சாவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல்துறைப் பணிமனைக்கு வந்த இரண்டு நபர்கள் முதலில் துப்பாக்கிப்பிரயோகம் செய்து பின்னர் கைக்குண்டொன்றை வீசி வெடிக்கச் செய்ததாகவும் பின்னர் இவர்கள் பணிமனைக்குள் புகுந்து மண்ணெய் ஊற்றி தீவைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ்தரப்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சிற்றூர்தி...

தீவுக்கும் இடையில் உள்ள பகுதியில் இவ்விபத்து இடம் பெற்றது.இவ்விபத்தில் ஏ.ஜீவராசா (வயது-43வேலணை), எஸ். முத்துராசா (வயது-53உடுப்பிட்டி), க.நிருஷன் (வயது-20 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (41,28)

### போராளிக்...

தமிழினி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் மற்றும் கலை ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது நிதர்சனம் மகளிர் போராளிகளின் தயாரிப்பில் உருவான 'ஈரத்தீ' முழுநீளத் திரைப் படத்தை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் வெளியிட்டுவைக்க, தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் பெற்றுக கொண்டு சிறப்பித்தார். போராளி நிமலாவின் நெறியாள்கையில் உருவான இத் திரைப்படம் கரும்புலிகளின் வரலாற்றைச் சித்திரிக்கின்றது.

### சிறில...

நிலையில் உள்ள வசந்த கரண கொட கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டதையடுத்தே மொகான் விஜய விக்கிரம ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளார்.

இதேவேளை, இவர் ஓய்வு பெறுவதையடுத்து சிறிலங்கா கடற்படையின் அடுத்த தலைமை அதிகாரியார் என்பதிலும் கடற்படை உயர் மட்டத்தில் கேள்விஎழுந்துள்ளது .வசந்தகரண கொடவுக்கு அடுத்து மூன்றாவது நிலையில் இருந்து வந்த மேற்குப் பிராந்தியத் தளபதி வைஸ் அட்மிரல் சரத் ரத்ன கீர்த்தியே கடற்படைத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு இவர் நியமிக்கப் பட்டால் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அண்மையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் உருவாக் கப்பட்டு வழங்கப்பட்டபிரதித் தலைமை அதிகாரி பதவியில் தொடர்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அழைப்பிதழில் தனது பெயரை தவறாக எழுதிய கப்டன் மீது தாக்குதல் நடத்திய மேஜர் ஜெனரல்

## -விசாரணை நடத்த குழு நியமனம்

சிறிலங்கா இராணுவ கப்டனை மேஜர் ஜெனரல் ஒருவர் மூர்க்கத்தனமாக தாக்கியது தொடர்பாக விசாரணை நடத்த இராணுவக் குழு ஒன்றை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல்சாந்த கொட்டேகொட நியமித்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் கூட்டுப்படைகளின் கட்டளைத் தலைமையகத்தில் இருவாரங்களுக்கு முன்பு நடந்துள்ளது.

இராணுவ கப்டனின்முகத்தில் சரமாரியாக குத்திய மேஜர்ஜெனரல் அவரது நெஞ்சிலும் கடுமையாக தாக்கியுள்ளார்.இச் சம்பவம் பல மூத்த இராணுவ உயரதிகாரிகளின் முன்னிலையிலேயே நடந்துள்ளதாக இராணுவத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படை நிகழ்ச்சி ஒன்றுக்கான அழைப்பிதழில் தனதுபெயரை தவறாக எழுதியதற்காக இந்தத் தாக்குதலை மேஜர் ஜெனரல் நடத்தியதாகவும்இரண்டு மாதங்களுக்கு முன்புதான் அவர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு அளிக்கப்பட்டவர் என்றும் அச்செய்திகள் கூறுகின்றன.

வடக்குப் பிரதேச யுத்தத்தின் போது கடுமையான காயங்களுக்குள்ளானவர் இந்தக் கப்டன் என்றும் கப்டனும் மேஜர் ஜெனரலும் கஜபாகு படைப்பிரிவைச் சேர்ந்த வர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

### தமிழீழ...

ராட்சிகிழக்கு தமிழீழக்கடற்படை அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழக் கடற்படைச் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார். லெப்.கேணல்மறவன் மாஸ்ரரின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை தமிழீழக்கடற்படையின் தளபதிகளில் ஒருவரான காதர் ஏற்றி வைத்தார். திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் புதல்வர் அணிவித்தார்.தொடர்ந்து சிறப்புரையினை .கேணல் சூசை நிகழ்த்தினார்.

தொடர்ந்து தமிழீழ கடற்படை இரண்டாவது துணைப்படை அணியினருக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதையடுத்து, கலை நிகழ்வுகள்நடைபெற்றன. நேற்றைய இந் நிகழ்வில் தமிழீழக் கடற்படைத் தளபதிகளான வினாயகம்,சலீம், கடற்றொழிலாளர் சமாசங்களின் இணையத்தலைவர் மோகன், தமிழீழக்கடற்படைமகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர், பூரணி, மற்றும் தளபதிகள், போராளி கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

### தமிழீழஅரசை...

படுத்தலில் பேரெழுச்சியுடன் இடம்பெறவுள்ள இந்நிகழ்வு இம்மாதம் 30 ஆம் திகதி பிற்பகல் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் மருத்துவபீட விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். இதில் இலட்சக் கணக்கில் மக்களை அணிதிரட்டி தமிழீழ தனிஅரசைவலியுறுத்தும் பிரகடனத்துக்கான மக்கள் ஆணையைப் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.என்று நேற்றுப் பிற்பகல் 6.00 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலு வலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் விஜயரூபன தலைமையில் நடைபெற்ற இப்பத்திரிகையாளர் மாநாட்டில்யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் உட்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது தமிழர்தாயகப் பகுதி எங்கும் விடுதலைப் புலிகளின் தலைமையிலான தமிழீழ அரச நிர்வாகச் செயற்பாடுகள் செயற்றிறன் மிக்கதாக செயற்பட்டு வருகின்றது. இந்தச் செயற்பாடுகள் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள தாயக நிலப் பரப்புக்களிலும் பிறநிலப்பரப்புக்களிலும் நேரடியாகவும், அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து விடுவிக்கப்படாத தாயகநிலப்பரப்புக்களில்மறைமுகமான நிழல் அரச கட்டமைப்பு நிர்வாகமாகவும் நடைபெற்று வருகின்றது. தமிழர் தாயக நிலப்பரப்பில் எழுபது வீதமான நிலப்பரப்பை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து தனக்கென ஒரு இராணுவம், காவல்துறை, நீதிநிர்வாக பொருளாதார கட்டுமானங்கள் என்பவற்றைக் கொண்டு நிமிர்ந்து நிற்கும் தமிழீழத் தேசம் தனி அரசாங்கமாக இயங்குவதற்குமான தகைமைகளைச் கொண்டுள்ளது. இதனைச் சர்வதேச சமூகத்தினரும் உணர்ந்துள்ளனர். இந் நிலையில் தமிழீழம் தனியரசாக அங்கீகரிக்கப்படும்போது சிறுபான்மை, பெரும்பான்மை என்ற இனவாத வேறுபாடுகளைக் கடந்து சிங்களவரும், தமிழரும் சமமான அந்தஸ்துள்ள அரசாங்கங்களின் கீழ் இயங்குகின்ற மக்கள் கூட்டமாக மாறும் போது சமமான பலத்துடன் இருக்கும் தமிழ் மக்களுடன் நிரந்தர சமாதானத்துடன் இணங்கி வாழ்வதற்கு சிங்களதேசமும் தாமாகவே முன்வரும் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஏனெனில் சாதாரணமான நிர்வாகக் கட்டமைப்புக்களைக் கூட சிறுபான்மை இனத்தவர்கள் என்ற காரணத்திற்காக தமிழர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு தயங்கும் இலங்கை அரசாங்கம் எதிர்காலத்தில் எந்தவொரு அரசியல் சுமுகமான தீர்வைத் தரப்போவதுமில்லை. தமிழீழ அரசுக்கான தேசம் சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்படும் பொழுது தற்போதைய இலங்கை அரசாங்கமானது மேலாதிக்கத்தைக் கைவிட்டு சமபலமிக்க தமிழீழ அரசுடன் இணங்கி தமிழீழ மக்களின் சமாதானப் பேச்சு ஒன்றை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். இந்த யோசனைகளைச் சர்வதேசத்திடம் முன் வைத்து வவுனியா, மட்டக்களப்பு கிளிநொச்சி ஆகிய இடங்களில் கடந்த காலங்களில் நடாத்தப்பட்ட தமிழ்தேசிய பிரகடனத்தினை அனுசரித்து யாழ்ப்பாணத்தில் தமிழீழ அரசுக்கான அங்கீகாரத்தை வலியுறுத்தும் நிகழ்வாக பொங்குதமிழ் 2005 ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டிற்காக சர்வதேச பத்திரிகையாளர்களும் ஊடகவியலாளர்களும், இராஜதந்திரிகளும் மற்றும் சிங்களப் பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும் தென்னிலங்கையில் இருந்து அழைக்கப்படவுள்ளனர் என இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

### மட்டு.இல்...

இச்சம்பவத்தின்பின்பு சித்தாண்டியில் மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றது.

வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறிலங்காஇராணுவத்தினருக்கு வழமை போன்று மாலைநேரத் தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவ முச்சக்கர வண்டிமீது இத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.இச்சம்பவத்திலும் ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைந்தார் மேற்படி இருவரும் தற்போதுபொலநறுவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.